AEIJMR – Vol 7 – Issue 05 – May 2019 ISSN - 2348 – 6724

# கொல்லர் தொழிலில் அறிவியல் சிந்தனைகள்

முனைவர் **ந.அய்யம்பெருமாள்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி,கோவிலாச்சேரி, கும்பகோணம்.

தமிழகத்தில் காணப்படும் பல்வேறு தொழில்களுள் ஒன்றான கொல்லுத் தொழில் பற்றியும், சங்க இலக்கியங்களில் கொல்லுத்தொழில் பற்றிய கூறுகளையும், மன்னர் முதல் மக்கள் வரை இத்தொழில் எவ்வாறு பயன்பட்டது என்பது பற்றியும் இன்றைய கால சூழலில் கொல்லர் தொழிலின் நிலைப்பாடு எவ்வாறு காணப்படுகிறது என்பதைப் பற்றியும் கொல்லர் தொழிலில் எவ்வகையான அறிவியல் சிந்தனைகள் பொதிந்துள்ளன என்பதைப் பற்றியும் ஆராயும் நோக்கோடு இக்கட்டுரையின் பணி அமைகிறது.

**கொல்லர் :**

கம்மாளர் இன மக்களின் ஐந்து தொழில்களுள் ஒன்றாக விளங்கும் கொல்லுத் தொழில் (இரும்புத்தொழில்) செய்வோரை கொல்லர்கள் என்று அழைப்பர். உலகில் பிறப்பு முதல் இறப்பு வரை பயன்படும் அனைத்து விதமான இரும்புக் கருவிகளையும் வடித்துக் கொடுக்கும் கொல்லர்களே கம்மாளர்களின் ஐந்து தொழில்களில் முதல் நிலையில் அமைந்துள்ளனர்.

சங்க காலங்களில் இரும்பின் பயன்பாடு அதிகமாக காணப்பட்டாலும் அத்தொழில் செய்யும் வல்லுநர்கள் அன்று குறைவாகத்தான் காணப்பட்டனர். கொல்லன் வருத்தி உழைத்தமையால் அவனது கைகள் இரும்பு போன்று காணப்பட்டது. ஆதலால் அவன் கருங்கைக் கொல்லன் எனப்பட்டான். இதனை,

***“இரும்பு பயன்படுத்துங் கருங்கைக் கொல்லன்***

***விசைத்தறி கூடமொடு பெரூஉம்”***

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

**போர்க்கருவிகள் செய்தல் :**

தற்போது இந்திய இராணுவத்திற்கு போருக்குறிய ஆயுதங்களை இராணுவ தொழிற்சாலைகள் மூலம் செய்து கொடுக்கின்றனர். இந்நிலையானது சங்க காலங்களில் மன்னர்களுக்குத் தேவையான போர்க்கருவிகளை கொல்லர்கள் வடித்துக் கொடுத்துள்ளனர் என்பதை பின்வரும் பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றது. அரசர் கொல்லர்களிடம் வந்து போருக்குறிய ஆயுதங்களை வடித்துத் தருமாறு வேண்டியதை ‘ஈர்ந்தார் கிழான் தாயன்’ என்றும் நீண்ட நெடிய வேலை வடித்துத் தருமாறு தன்னூர்க் கருங்கைக் கொல்லனிடம் முறையிடுவதை,

***யாந்தன்னிரக்குங் காலைத் தானெம்***

***உண்ணா மருங்கல் காட்டித் தன்னூர்க்***

***கருங்கைக் கொல்லனை யிரக்கும்.***

***திருந்திசை நெடுவேல் வடித்திசினெனவே*** 180:10-13

எனும் பாடல் வழி அறிய முடிகிறது. படை வீரர்கள் போரிடுவதற்குறிய ஆயுதங்கள் அனைத்தையும் செய்து தருமாறு கொல்லர்களைப் பணிப்பர். அம்மன்னனின் ஆணையை ஏற்று போர்க்கருவிகளைச் செய்து தருவதோடு மட்டுமல்லாமல் பல்வேறு தொழிலுக்குரிய கருவிகளையும் செய்து கொடுத்து வந்துள்ளனர்.

**இரும்புக் கருவிகள் செய்வோரின் வாழிடங்கள் :**

இன்றைய காலத்தில் இரும்புக் கருவிகள் செய்வோரும் இடமும் ஊரின் புறத்தே தொழிற்சாலைகளாக காணப்படுகின்றன. தொழிற்சாலையின் அருகிலேயே இரும்புத் தொழிலாளர்களும் வாழ்கின்றனர். இப்பகுதியானது தொழிற்பேட்டை, தொழில்நகரம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. மன்னர்களின் காலங்களில் இரும்புத் தொழிலை அதிகமாக செய்தவர்கள் கொல்லர்களே ஆவர். இவர்கள் ஊரின் புறத்தே ஏழ் ஊரின் நடுவே குடிசை அமைத்து வாழ்ந்த பகுதியை கொல்சேரி என்றும் கொல்லன்தெரு என்றும் முன்னர் அழைக்கப்பட்டதை,

***“ஏர்ஊர்ப் பொது வினைக்கு ஓர் ஊர் யாத்த”*** (குறுந்தொகை.172:5)

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகிறது.

**கொல்லுலைகள் :**

அறிவியலின் முன்னேற்றத்தின் காரணமாக இரும்புத் தொழில் நாளுக்கு நாள் வளர்ந்துக் கொண்டு தான் வருகின்றது. இரும்புகளை உருக்குதலும் அவற்றின் வழி பொருட்கள் செய்தலும் காலந்தோறும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இரும்புகளை உருக்கி, பொருட்கள் செய்தல் என்பது தற்போது தொழிற்சாலைகளில் பெரிய அளவில் நடைபெறுகிறது. பழந்தமிழகத்தில் கொல்லர்கள் இரும்புத்தொழில் செய்து வந்த இடத்திற்குப் பட்டறைகள், பணிக்களரிகள் எனப் பெயர் பெற்றன.ஏழு ஊர்களுக்குச் செய்ய வேண்டிய கொல்லுத் தொழிலானது பொதுவான ஒரு ஊரில் அமைந்த கொல்லுலையே காணப்பட்டன என்பதனை,

***"ஏழு ஊர்பொது வினைக்கு ஓர் ஊர் யாத்த***

***உலை வாங்க மீதிதோல் போலத்"***

எனும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.கொல்லுலையில் பொருத்தப்பட்டிருக்கும் துறுத்தியும் உடலையும் இணைக்கும் இடத்திற்கு உலை என்று பெயர். துருத்தியின் உலை மூக்கானது ஒரு துளை உடையதாகவே காணப்படும். பெண் யானையானது பெரும் மூச்சு விட்டாற்போன்று உலையில் செலுத்தும் உலை மூக்கானது இரு துளைகள் உடையதைப் போன்று இரட்டைக் கதவமைந்து காணப்பட்டன. இதனை,

***"பிடியுயிர்ப் பன்ன கைகவ ரிரும்பின்***

***ஓவுற ழிரும்புறங் காவல் கண்ணிக்"*** (புறம் 345:89)

எனும் பாடல் அடிகள் வழி அறிய முடிகிறது. உலையில் காணப்படும் இரும்பின் வெம்மையை குறைப்பதற்காக பணை மடலின் மூலமாக நீர்த்துளிகளைத் தெளித்து நெருப்பின் வெம்மையை நீக்கியுள்ளனர்.

**கொல்லுக்கருவிகள் :**

தமிழர்கள் கொல்லுத் தொழிலுக்குப் பயன்படுத்திய கருவிகள் பற்றியும் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.துருத்தி என்று அழைக்கப்படும் கருவியானது உலையில் காணப்படும் நெருப்பின் வெப்பத்தை அதிகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் ஒருவகைத் தோற்கருவி ஆகும். தற்பொழுது இக்கருவியானது பாத்திரங்களுக்கு ஈயம் பூசுதல் என்னும் தொழிலுக்கும் பெரிய தொழிற்சாலைகளில் துருத்தி கருவியின் மாதிரியைக் கொண்டும் வெப்பத்தை அதிகரித்து இரும்பினை உருக்குகின்றனர். இந்நிகழ்வானது மன்னர்கள் காலங்களிலேயே கொல்லர்கள் தனது உலையில் துருத்தியை அமுக்கி ஊதி, அறிவியல் சிந்தனையோடு வேலை செய்துள்ளனர் என்பதை,

***"..........................................மென்தோல்***

***மதி உலைக் கொல்லன் முறிகொடிற்றன்ன"*** (பெரும்.206-208)

எனும் பாடல் அடிகள் வழி அறிய முடிகிறது. குறடு என்னும் கருவியானது கரியை உலையில் எடுத்துப் போடுவதற்காகவும், சூடாக்கப்பட்ட இரும்பை வெளியில் எடுப்பதற்காகவும் பயன்படுத்துவனவாகும். கதிர்கள் முற்றி வளைந்திருத்தலுக்குக் கொல்லன் கரியை எடுக்கும் குறடு வளைந்திருத்தலோடு ஒப்பிடப்படுகிறது.இதனை,

***"கரிகறட்டு இறைஞ்சிய செறிக்கோட்டைபங்குரல்"***(குறுந் :198-4)

எனும் பாடல் அடி வழி அறிய முடிகிறது. சம்மட்டி என்பது இரும்பினைக் காய்த்து பட்டைக் கல்லின் மேல் வைத்து ஓங்கி அடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு வகை கருவியாகும். பகைவருடைய மதிலைப் பாய்ந்து தாக்குவதால் யானையின் கோட்டிற் செறிந்த பூண்கள் சிதைந்து போகும். ஆதலின் அப்பூனை சரிசெய்ய கொல்லன் சம்மட்டியைப் பயன்படுத்தினான். இச்செய்தியை,

***"கருங்கைக் கொல்ல னிரும்பு விசை***

***கூடத் தன்னிசை வெர்இ மாடத்***

***தலையுறை மறவின் செங்கோள் சேவல்"***(பெரும்.437-440)

எனும் பாடல் அடிகள் வழி அறிய முடிகிறது. பகைவருடைய மதிலைப் பாய்ந்து தாக்குவதால் யானையின் கோட்டிற் செறிந்த பூண்கள் சிதைந்து போகும். ஆதலின் அப்பூனை சரிசெய்ய கொல்லன் சம்மட்டியைப் பயன்படுத்தினான்.

**கொல்லர்களின் வடித்தல் திறன் :**

தற்போது நவீனமயமாக்களின் காரணமாக இரும்புத் தொழிற்சாலைகளில் இரும்பை உலையிலிட்டு காய்ச்சி, இரும்பினால் செய்யக்கூடிய பல்வேறு பட்ட பொருட்களை மக்களுக்கு பயனுள்ள வகையில் செய்து வருகின்றனர். இந்நிகழ்வினை மன்னர்கள் காலங்களிலேயே கொல்லர்கள் அறிவியல் சிந்தனையோடு செயல்பட்டு பல்வகைப் பட்ட தொழிற் கருவிகளை செய்துள்ளனர். கொல்லர்கள் செய்த இரும்புத் தொழிலின் எச்சமாகவும், நவீன கால மாறுபாட்டின் தொடக்கமாகவும் இன்றைய தொழிற்சாலைகள் இயங்குகின்றன.

கொல்லன் இரும்பை உலையிலிட்டுக் காய்ச்சி பலவகையான கருவிகளை வடிவமைத்துள்ளான். இரவு நேரத்தில் மின் மினிப் பூச்சிகள் மொய்த்து இரையைத் தேடி புற்றின் வாய்ப்பகுதி சிதைந்துபோய் காணப்பட்டன. பெரிய கையை உடைய கரண்டியானது தனது கையால் மண்ணை அகழ்ந்து தள்ளும்போது அதன் அருகில் மொய்த்துள்ள மின்மினிப் பூச்சிகள் பறந்தன. அவ்வாறு பறந்து செல்லும் காட்சியானது கொல்லன் உலையில் காய்ச்சப்பட்ட இரும்பைப் பட்டைக் கல்லில் வைத்து அடிக்கும்போது அதிலிருந்து சிதறுகின்ற தீப்பொறிகள் போன்று காணப்பட்டன. இதனை,

***"மின்மினி மொய்த்த முடிவு வாய்ப் புற்றும்***

***பொன்நெறி பிதிரிற் சுடர வாங்கிக்***

***குறும்பி கொண்டும் பெருங்கை ஏற்ற***

***இரும்பு செய் கொல்லெனத் தோன்றும் ஆங்கண"***(அகம்.72:3-6) எனும் பாடல் வழி அறிய முடிகிறது. இரும்பைச் சூடாக்கி, வேண்டிய பொருட்களை வடித்து தருவது அக்காலக் கொல்லர்களின் கடமையாக இருந்துள்ளது. வடித்தல் என்பதற்கு உருவமைத்தல் என்னும் பொருளே ஏற்புடையதாகும். இரும்பைத் தகடாக்கினாற் போன்ற மெல்லிய தோலையுடைய உடம்பின் சம்பாக் கோரையின் காயை முறித்து அதன் மகரந்தத்தைப் பூசிக் கொண்டிருக்கும் காட்சியாகும்.

**முடிவுரை:**

மக்களுக்குத் தேவையான இரும்பு பொருட்கள் அனைத்தையும் செய்து கொடுக்கும் கொல்லர்களின் பட்டறை இன்று பெரிதும் குறைந்துக் கொண்டே வருகிறது. காலமாறுபாட்டால் கொல்லுப்பட்டறைகள் எல்லாம் தொழிற்சாலைகளாக மாற்றம் பெற்று வருகிறது. கொல்லர்கள் இருக்கிறார்கள். கொல்லர் பட்டறைகள் தான் நாள்தோறும் குறைந்துக் கொண்டே வருகிறது.